https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

23rd JULY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 37



# எரிபொருள் விலை அதிகரிப்பு:

## மீன்களின் விலைகள் உயரும் ஆபத்து:



## 3 ஆயிரம் படகுகள் ஸ்தம்பிதம்

எரிபொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக நாடு பூராகவும் உள்ள மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித் தொழிலை தொடர முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இதன் காரணமாக நாடுபூராகவும் 3 ஆயிரம் மீன்பிடி படகுகள் அந்தந்த துறைமுகங்களிலேயே நீண்ட நாட்களாக நங்கூரமிடப்பட்ட நிலையில் உள்ளன.

இதனால் மீன்களின் விலை படுமோசமாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது 02

### அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தல்:

## தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி ஆலோசனை



அடுத்த வருடம் இறுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவேண்டும். ஆனால்,அந்த வருடம் ஆரம்பத்தில் அதாவது,ஜனவரி அல்லது பெப்ரவரி அல்லது மார்ச்சில் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பில் ஜனாதிபதி கடந்த வாரம் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

மேலும், அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்திலும் இந்தத் தேர்தல் செலவுக்கான நிதி ஒதுக்கப்படவுள்ளது.

அதன் அடிப்படையில்,குறுகிய காலத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான முறைமை ஒன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் ஏக்கநாயக்க சமன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கூறியுள்ளார்.



## தினமும் 10 லட்சம் முட்டைகள் இறக்குமதி:

### விலை 35 ரூபா

அரசாங்கம் இந்தியாவில் இருந்து முட்டைகளின் இறக்குமதியை அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

அதன்படி தினமும் 10 லட்சம் முட்டைகள் இறக்குமதி 02






## தேர்தல் கண்காணிப்பு பணியில் மைத்திரி

காம்போடியாவில் இன்று இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படவுள்ளார்.

அந்நாட்டு அரசால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ள மைத்திரி இன்று கண்காணிப்பு பணியைத் தொடங்குவார். 02



புதுசுடர்
www.puthusudar.lk
2023 JULY 23 - SUNDAY

# வாக்குறுதி நிறைவேற்றப்படுமா ?

ஜனாதிபதியாகி ஒரு வ்ருடத்தின் பின் மிகவும் சிரமப்பட்டு எப்படியோ இந்திய பிரதமர் மோடியைச் சந்தித்துவிட்டார் எம து நாட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

இலங்கையில் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவானால் அவரது முதல் சர்வதேச விஜயம் இந்தியாவாகத்தான் இருக்கும்.முதல் சந்திப்பு இந்திய பிரதமராகத்தான் இருக்கும்.

ஆனால், ரணில் ஜனாதிபதியானதும் அது நடக்கவில்லை.ஒரு வருடமாக ப ல வழிகளில் முயற்சி செய்தார் அந்தச் சந்திப்புக்காக.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறொகொட ஒரு பக்கத்தில் முயற்சி செய்தார். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கூட களத்தில் இறங்கி நின்றார்.

இந்திய பிரதமருக்கு நெருக்கமான பலரைப் பிடித்து காய் நகர்த்தினார்கள்.ஆனால்,மோடி இழுத்தடித்துக்கொண்டே இருந்தார்.

இறுதியில் ஒரு வருடத்தின் பின் ஒருவாறு தலை சாய்த்தார் மோடி.2நாள் விஜயத்தை மேற்கொண்டு மோடியை சந்தித்து முடித்துள்ளார் ரணில்.பல வர்த்தக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த சந்திப்பின் முக்கியமான விடயம் என்னவென்றால் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என்பதுதான்.

இந்த அழுத்தத்தை ரணிலுக்கு வழங்க வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தது இந்திய அரசு.அதற்கு ஏற்ப இங்கு தமிழர் தரப்பிடம் இருந்தும் மோடிக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தமக்கு உடனடியாக அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று வருகின்ற ரணிலிடம் அழுத்தம் கொடுங்கள் என்று அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

இப்படி ரணில் அங்கு செல்லும் முன்பே அரசியல் தீர்வு பற்றிய அழுத்தம் தயாராகவே இருந்தது.

ரணிலின் விஜயத்தின் நோக்கம் பொருளாதாரரீதியில் வீழ்ந்து கிடக்கும் இலங்கையை கட்டி எழுப்புவதற்காக இந்தியாவிடம் இருந்து எதையாவது பெற வேண்டும் என்பதுதான். ஆனால்,இந்தியாவின் நோக்கம் அதற்கு கைமாறாக அரசியல் தீர்வு போன்ற விடயங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது.

இதற்காகவே அவர் ஜனாதிபதி பதவி ஏற்று சில நாட்களில் தமிழ் அரசியல் தலைவர்களை அழைத்து பேச்சு நடத்தினார்.

இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் காணி-பொலிஸ் அதிகாரம்தான்.சமஸ்டி அடிப்படையில் காணி-பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய அதிகாரப் பகிர்வுதான் எங்களுக்கு வேண்டும் என்கிறது தமிழ் தரப்பு.

ஆனால், காணி-பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து ஒற்றை ஆட்சிக்குள்தான் தீர்வு என்கிறது இலங்கை அரசு.

மேலும் வடக்கு-கிழக்கை இணைத்தும் தர வேண்டும் என்கிறது தமிழ் தரப்பு.அதுவும் முடியாது என்கிறது அ ரசு.

தமிழர் தரப்பு கேட்கும் அதிகாரங்கள் எல்லாம் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவை.சிங்கள மக்களின் எதிர்ப்பை மீறி அந்த அதிகாரங்களை வழங்கினால் அரசின் கதை அவ்வளவுதான்.

இதனால் சிங்கள மக்கள் விரும்புகிற அதிகாரத்தையே தமிழர்களுக்கு வழங்குவதற்கு விரும்புகிறது அரசு.இந்த நிலையில்,அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான வாக்குறுதியை இந்தியாவிடமும் வழங்கிவிட்டு வந்துள்ளார் ரணில்.

இந்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுவாரா என்பதுதான் அடுத்த கேள்வி.இவ்வாறான வாக்குறுதிகள் இந்தியாவுக்கு புதியவை அல்ல.

மஹிந்தவின் ஆட்சியில்கூட பல தடவைகள் இதே வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.13ஐ வழங்கப்படும் என்ற வாக்குறுதியை இந்தியாவுக்கு வழங்கியதே மஹிந்த அரசுதான். ஆனால்,எதுவும் நடக்கவில்லை. அந்த வகையில் ரணிலின் இந்த வாக்குறுதியும் அமையுமா என்று பார்ப்போம்.

## "தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு" தொடர்பான விருந்தினர் விரிவுரை

(நூருள் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் துறையின் வரலாற்றுப் பிரிவானது தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை கலை கலாசார பீடத்தின் கலை அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் அனைத்துத் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதியாக பங்கேற்றதுடன், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பீடத்தின் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர். வரலாற்றுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் முன்னாள் துறைத் தலைவருமான கலாநிதி அநூஷியா சேனாதிராஜா வரவேற்புரையை வழங்கினார். தொடர்ந்து கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தையும் கருத்தாடல் சம்மந்தமான புலமைசார் ஆரம்பத்தினையும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதி உரையை நிகழ்த்தினார். மேலும் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான கல்வி மற்றும் ஆய்வு ரீதியான கருத்தாடல்கள், விரிவுரைகளின் அவசியத்தை சுட்டிக்காட்டியதுடன் உலக நாடுகளின் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.



தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை பிரதான நிகழ்வாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக இந்தியாவின் மொஹாலி பஞ்சாப்பின் அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான இந்திய நிறுவனத்திலிருந்து ((Indian Institute of Science Education and Research) மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் தலைவரும் இணைப் பேராசிரியருமான கலாநிதி வி. ராஜேஷ் விரிவுரையை ஆய்வுக் கண்ணோட்டத்தில் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் ஏறத்தாழ 200இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாற்றை ஆய்வு ரீதியில் முன்வைத்த வளவாளர், இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் சம்பந்தமான தேடலின் அவசியத்தையும் எடுத்துரைத்தமை சிறப்பிற்குரியது.

### தினமும்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

செய்யப்படும்.ஒரு முட்டையின் ஆகக்கூடிய விலை 35 ரூபாவாக நிர்ணயிக்கப்படும். ஆனால் அவை சூப்பர் மார்க்கட்களில் மாத்திரமே விற்கப்படும்.


முட்டை விலை தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்து இந்த இறக்குமதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரச தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

நாட்டு மக்களின் பாவனைக்கு தினமும் 10 லட்சம் முட்டைகள் தேவைப்படுவதாலேயே மேற்படித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

### தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அரசியலில் அவர் கொண்டிருக்கும் நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையிலே அவருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




### எரிபொருள்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

என்று அகில இலங்கை மீன்பிடி படகுகளின் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ருவான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

டீசல் ஒரு லீற்றரின் விலை 115 ரூபாவில் இருந்து 308 ரூபா வரை அதிகரித்துள்ளது.இதனால் மீன் பிடிப்பதற்கான செலவு 166 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இப்போதே மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளன.3 ஆயிரம் படகுகள் கடலுக்குச் செல்லாததால் மீன்களின் வருகை குறைந்துள்ளன.இதனால் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதவாறு மேலும் மேலும் விலைகள் அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

இதனால் இந்த விலைகளை கட்டுப்படுத்துவதற்காக டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகளை ஆக்குறைந்தது 200 ரூபாவாக சரி நிர்ணயிக்க வேண்டும் என்று செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.






# சட்டவிரோத குடிபெயர்தலை தடுக்க எல்லை தாண்டிய ஒத்துழைப்பு அவசியம்

அவுஸ்திரேலியாவின் கூட்டு முகவர் பணிக்குழு நடவடிக்கை இறையாண்மை எல்லைகள் தளபதி, ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ், CSC, RAN இன், கடந்த வார கொழும்பு விஜயம் மூலம், சட்டவிரோத ஆட்கள் கடத்தலை நிறுத்துவதற்கான அவுஸ்திரேலியாவின் அர்ப்பணிப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

வாழைச்சேனையிலிருந்து சென்ற 41 இலங்கையர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் இடம்பெயர முற்பட்ட நிலையில், கடந்த மே மாத ஆரம்பத்தில் Operation Sovereign Borders இனால் இடைமறிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இந்த விஜயம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ரியர் அட்மிரல் ஜோன்ஸ், ”சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதிலான வெற்றியானது, இரு அரசாங்கங்களின் தொடர்ச்சியான வெற்றியாகும். ஆனால் இது தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய பணிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.” என்றார்.

”சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்களுக்கிடையேயான கூட்டாண்மை உயர்ந்த தரத்தில் உள்ளது. அத்துடன் சமீபத்தில் இடம்பெற்ற இந்த இடைமறிப்பானது, இதன் நீடித்த நெருக்கத்திற்கு ஒரு சான்றாகும்” என ரியர் அட்மிரல் ஜோன்ஸ் மேலும் தெரிவித்தார்.

”இந்த இடைமறிப்பு, இந்த சட்டவிரோத பயணங்களின் ஆபத்துகள் மற்றும் பின்விளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டுவதோடு, இது தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் நிரூபிக்கிறது”

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா இங்கு கருத்துத் தெரிவிக்கையில், “தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை மக்கள் இன்னும் ஏமாற்றமான வழிகளில் செலவிட்டு, சட்டவிரோத கடல்வழிப் பயணங்கள் பலனளிக்கும் என ஏமாறுகிறார்கள். அது அவ்வாறு அமையாது. அதனால்தான் இந்த பயணங்களைத் தடுக்கும் வகையில் அது தொடர்பான இடர்கள் மற்றும் சட்ட ரீதியான பாதைகள் குறித்து சமூகங்களுக்குக் தெளிவூட்டுவது இன்றியமையாததாக உள்ளது.” என்றார்.

சட்டவிரோத கடல் வழிப் பயணங்களைத் தடுப்பதிலும் அதனை முறியடிப்பதிலும் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான பங்காளித்துவத்தின் செயற்றிறன் தொடர்பில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ இங்கு பாராட்டிப் பேசினார்.

”ஆட்கடத்தல் மற்றும் ஏனைய நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களம் அவுஸ்திரேலியாவுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது. மக்கள் ஆட்கடத்தல்காரர்களினால் பாதிக்கப்பட்டு இரையாவதைத் தடுப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்,” என நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த உறவின் வெற்றியானது நாடு முழுவதும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் ஆட்கடத்தலுக்கு எதிரான “Zero Chance“ தொடர்பாடல் பிரச்சாரத்தின் வெற்றியை பிரதிபலிக்கிறது. இத்திட்டமானது, பல்வேறு விளம்பரங்கள் மற்றும் சமூக தொடர்பாடல் வழிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது அவுஸ்திரேலியாவின் வலுவான எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள், உத்தரவாதமற்ற கடல் பயணங்களை மேற்கொள்வதால் ஏற்படும் ஆபத்துகள், சட்டவிரோதமாக குடியேறுபவர்களை எச்சரிப்பதற்காகவும், ஆட்கடத்தல்காரர்கள் தங்கள் நலனுக்காக மேற்கொள்ளும் குற்றவியல் புறக்கணிப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவை ஏற்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கொண்டுள்ளது.

Zero Chance தொடர்பான வீதியோர சமூக விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பில் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில், அவுஸ்திரேலியாவின் கடுமையான எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து இலங்கையர்களிடையே அதிக அளவிலான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமை அறியக் கூடியதாக இருந்தது. ஆயினும் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்லும் முயற்சிகளின் சட்டரீதியான பின்விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே பல்வேறு மட்டங்களில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

“கணக்கெடுக்கப்பட்டவர்களில் 97% ஆனோர் சட்டவிரோத கடல் பயணங்கள் குறித்த அவுஸ்திரேலியாவின் கொள்கைகள் பற்றிய வலுவான விழிப்புணர்வைக் கொண்டிருந்தனர். இந்த மட்டத்திலான விழிப்புணர்வானது, இலங்கையிலுள்ள பல்வேறு சமூக – பொருளாதார குழுக்களிடையே Zero Chance செய்தியை பரப்புவதில் எமது இலங்கை பங்காளிகளின் அர்ப்பணிப்பைப் பறைசாற்றுகிறது.” ரியர் அட்மிரல் ஜோன்ஸ் தெரிவித்தார்.

”இதை இவ்வாறு சொல்வதன் மூலம், இப்பிராந்தியத்தில் எமது ஒருங்கிணைந்த பணி ஒருபோதும் நிற்காது. இது போன்ற ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதன் பயனற்ற தன்மையை இங்கு இதற்கு அப்பால் என்னால் விளக்கமுடியாது. சட்டவிரோத கடல் ரீதியான குடிபெயர்வை மேற்கொள்வது தொடர்பில் எதிர்பார்ப்பு கொண்டவர்களுக்கு வெற்றிக்கான வாய்ப்பு பூச்சியமாகவே உள்ளது” என ஜோன்ஸ் இங்கு வலியுறுத்தினார்.

# SEDR திட்டத்தின் மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான 5 நாள் பயிற்சி

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டம், ஆசியா நிலையத்தின் (TAF) தொழில்நுட்பத் தலைமை மற்றும் ஒருங்கிணைப்புடன், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஊடாக நீதி அமைச்சுடன் இணைந்த 20 மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான ஐந்து நாள் மேம்பட்ட மத்தியஸ்த திறன்கள் மற்றும் நுட்பங்கள் பயிற்சி நிகழ்ச்சியை சமீபத்தில் நிறைவுசெய்தது.

இந்த நிகழ்ச்சியானது, மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களை மேம்பட்ட மத்தியஸ்த திறன்களுடன் ஆயத்தபடுத்தி, அது மூலம் இலங்கையில் உள்ள மத்தியஸ்த சபைகளுக்கு கொண்டுவரப்படும் பிணக்குகளை திறம்பட தீர்க்க தன்னார்வ மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்க அவர்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்டது.



பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டம் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆசியா நிலையத்துடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்சிலால் செயல்படுத்தப்படும் நான்கு வருட நீதிக்கான அனுகல் திட்டமாகும்.

இத்திட்டம் இலங்கையில் நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதையும் மத்தியஸ்த சேவைகள் உட்பட மாற்றுவழி பிணக்குத் தீர்வு பொறிமுறைகளின் பயன்பாட்டை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஐந்து நாள் பயிற்சி அமர்வு, இலங்கையில் மத்தியஸ்த முயற்சிகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களின் ஆற்றல்கள் மற்றும் கொள்திறனை மேம்படுத்துவதற்கான ஆசியா நிலையத்தின் பணியின், முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

அனைத்து தரப்பினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முடிவை எட்டுவதன் மூலம் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக நாட்டு மக்களுக்கு தங்கள் சேவைகளை தற்போது வழங்கிக்கொண்டு இருக்கும், 8500க்கும் மேற்பட்ட தன்னார்வ மத்தியஸ்தர்களை பயிற்றுவிப்பதற்கும் அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கும் மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த மேம்பட்ட மத்தியஸ்த திறன்கள் மற்றும் நுட்பங்கள் பயிற்சியானது, இலங்கையில் நடைமுறையில் உள்ள மத்தியஸ்தத்திற்கான ஆர்வ –அடிப்படையிலான அணுகுமுறையின் கொள்கைகளை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையமாகக் கொண்டது, மேலும் தற்போதைய முறைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும் போது, நாடு முழுவதும் உயர்தர மற்றும் திறமையான மத்தியஸ்த சேவைகளை உறுதிப்படுத்தக்கூடிய, மத்தியஸ்தத்தின் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட கருத்தாக்கங்களை முன்வைத்தது.

இந்த இலக்கை அடைய, ஐந்து நாள் பயிற்சியானது மத்தியஸ்த செயல்முறை மற்றும் இலங்கையில் அதன் கோட்பாடு மற்றும் நடைமுறைகள், நிதி பிணக்குகள், வீடு, காணி மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட பிணக்குகள், நலமீட்பு நீதி மற்றும் பல தரப்பு மத்தியஸ்தம் உட்பட பல தலைப்புகளை உள்ளடக்கியது.

இது பங்கேற்பாளர்களுக்கு நடைமுறையில் தங்கள் திறன்களை பிரயோகிக்கவும் மேம்படுத்தவும் வாய்ப்பு வழங்கிய உருவகப்படுத்தப்பட்ட மத்தியஸ்த அமர்வுகளையும் உள்ளடக்கியது.

இந்தப் பயிற்சியானது , மத்தியஸ்த துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நிபுணத்துவம் பெற்ற பயிற்சியாளரான, சர்வதேச நிபுணர் ஜொனதன் பார்ட்ச் என்பவரால் நடத்தப்பட்டது.

அவர், 1980 களின் பிற்பகுதியில் இருந்து இலங்கையில் மத்தியஸ்தத்தை மேம்படுத்துவதில் ஆசியா நிலையத்தின் நீண்டகால பங்காளியாக இருக்கும், அமெரிக்காவை தளமாகக் கொண்ட Collaborative Decision Resources Associates (CDR Associates) இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார்.





தொடர் 10

# பிரபாவின் இறுதி நிமிடம்...!!

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்





## பிரபாவைக் காப்பாற்ற இலங்கை இராணுவம்மீது அமெரிக்கா விமானத் தாக்குதல்...???

மறுபுறம்,சர்வதேச நாடுகள்.

பிரபாவைக் காப்பாற்றும் முயற்சியில்...

துடியாய்த் துடிக்கின்றன அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள்.

பிரபாவை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்.

கொடுக்கின்றன அழுத்தம் மஹிந்தவுக்கு.

தொடர் அழுத்தம்..தொடர் மிரட்டல்.

“போரை நிறுத்தங்கள்...“

அசையவில்லை அவர்.

உறுதியாக நிற்கிறார்.முடியவே முடியாது.

இது கடைசி சந்தர்ப்பம்.புலிகளை அழித்தே தீருவேன்.

புலிகள் அழியும் கடைசி நேரத்தில் வந்து புலிகளை காப்பாற்றுவதற்கு–பிரபாவைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதை ஏற்க முடியாது.

இந்த விடயத்தில் தலையிட வேண்டாம்.

எல்லா நாடுகளுக்கும் மஹிந்தவின் பதில் இதுதான்.

படைத் தளபதிகளுக்கும் பயம்.

கடைசி கட்டத்தில்–பிரபாவை பிடிக்கும் தருணத்தில் அரசு போரை நிறுத்திவிடுமோ...!!!

சர்வதேசத்துக்கு அடிபணிந்துவிடுமோ...!!!

அப்படியென்றால் பட்ட கஷ்டம் எல்லாம் வீணாகிவிடுமே...!!!

வடமராட்சி போரைப்போல்...

போரை நிறுத்தும்–பிரபாவைக் காப்பாற்றும் சர்வதேசத்தின் முயற்சிகள் பல வடிவில்.

மஹிந்தவை சந்திக்கிறார்கள் இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபெண்ட்,பிரான்ஸ் நாட்டுக் குழுவினர் ஆகியோர்.

மஹிந்தவின் எம்பிலிபிட்டிய விடுதியில்...

“போரை உடன் நிறுத்துங்கள்.பிரபாவை எங்களிடம் தாருங்கள்“

இதுதான் அவர்களின் கோரிக்கை.இணங்கவில்லை மஹிந்த.

கடுமையாக எச்சரிக்கிறார் அவர்களை...

இந்த நாடு இனியும் உங்களது காலனித்துவ நாடு அல்ல.போரை நிறுத்த வேண்டுமா,தொடர வேண்டுமா என்று முடிவெடுப்பது நானே என்கிறார்.

தோல்வியுடன் திரும்புகிறது அக்குழு.

இருந்தும்,கைவிடவில்லை முயற்சியை.

மீண்டும் முயற்சி.மீண்டும் அடுத்த குழு.

அது போர் முடியப்போகும் கட்டத்தில்... பிரபாகரன் கொல்லப்படப்போகும் கட்டத்தில்...

அந்தக் குழு வந்தால் எல்லாம் தலைகீழாக மாறும்.போரை நிறுத்த வேண்டி வரும்.பிரபாகரனை ஒப்படைக்க வேண்டி வரும்.

இதைத் தடுக்க வேண்டும்.அந்தக் குழுவைச் சந்திப்பதைத் தடுக்க வேண்டும்.

யோசிக்கிறார் மஹிந்த.

கிடைக்கிறது ஐடியா ஒன்று...

அந்தக் காலப் பகுதியில் ஜோர்தானில் பு 8 மாநாடு.மஹிந்தவுக்கும் அழைப்பு.

போவதில்லை என்றே தீர்மானம்.

இப்போது மாற்றுகிறார் அந்த முடிவை.

மாநாட்டுக்குச் செல்லுதல்...

உண்மையில் மாநாட்டில் கலந்துகொள்வதல்ல நோக்கம்..

வருகின்ற சர்வதேச குழுவை சந்திக்கக்கூடாது.அதுதான் நோக்கம்.

போர் எப்படியும் ஒரு வாரத்தில் முடிந்துவிடும்.

முடிந்த பின்தான் நாடு திரும்புதல்....

அதற்குள் எல்லா பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

நடக்கிறது திட்டப்படி.கிளம்புகிறார் ஜோர்தானுக்கு...

தடைப்படுகிறது அந்தக் குழுவின் இலங்கை பயணம்.

போர் முடியும் வரை மஹிந்த அங்குதான்.

மே 18 ஆம் திகதிதான் நாடு திரும்புகிறார்.

கடும் உட்சாகம் படைத் தளபதிகளுக்கு. மஹிந்தவின் இந்த நிலைப்பாட்டால்...

இப்போது நாட்டின் இரண்டு முக்கியஸ்தர்கள் நாட்டில் இல்லை.

ஒருவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ.

அடுத்தவர் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

மஹிந்த ஜோர்தானில்...பொன்சேகா சீனாவில்..

பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸ மட்டுமே நாட்டில்...

மே 14 ஆம் திகதி.

53 ஆவது படைத் தளபதி கமால் குணரத்னவைத் தொடர்புகொள்கிறார் கோத்தா.

“போரை விரைவாக முடியுங்கள்.போரைக் கைவிடுமாறு சர்வதேச அழுத்தம் அதிகமாக உள்ளது.“ என்கிறார்.

இன்னும் 4 நாட்கள் மட்டும்தான்.18ஆம் திகதி முடிந்துவிடும்.

உறுதியளிக்கிறார் கமால்....

மறுநாள் 15ஆம் திகதி.... சரத் பொன்சேகா...

தொடர்புகொள்கிறார் கமால் குணரத்னவை.சீனாவில் இருந்து...

எத்திவைக்கிறார் அதே தகவலை.

அத்தோடு இன்னொரு தகவலும்...

“அமெரிக்கா எம்மீது கடும் கோபமாக உள்ளது.சிலவேளை,அவர்கள் எம்மீது விமானத் தாக்குதல் நடத்தக்கூடும்.

எதற்கும் பாதுகாப்பான இடத்தைத் தயார்படுத்தி வையுங்கள்.

இதை படையினர் யாரிடமும் சொல்ல வேண்டாம்.அவர்கள் சோர்வடைந்துவிடுவார்கள் “ – என்கிறார்...

உஷாராகிறார் கமால்...

தீவிரப்படுத்துகிறார் ஏற்பாடுகளை.. பாதுகாப்பு ஏற்பாடுகளை...

எல்லாம் தயார் நிலையில்...

(தொடரும்...)

**மே 14 ஆம் திகதி.**

**53 ஆவது படைத் தளபதி கமால் குணரத்னவைத் தொடர்புகொள்கிறார் கோத்தா.**

**“போரை விரைவாக முடியுங்கள்.போரைக் கைவிடுமாறு சர்வதேச அழுத்தம் அதிகமாக உள்ளது.“ என்கிறார்.**

**இன்னும் 4 நாட்கள் மட்டும்தான்.18ஆம் திகதி முடிந்துவிடும்.**

**உறுதியளிக்கிறார் கமால்....**

**மறுநாள் 15ஆம் திகதி....சரத் பொன்சேகா...**

**தொடர்புகொள்கிறார் கமால் குணரத்னவை.சீனாவில் இருந்து...**

**எத்திவைக்கிறார் அதே தகவலை.**

**அத்தோடு இன்னொரு தகவலும்...**





# விமானத்தில் டிஸ்கஷன்



முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கம்போடியாவுக்கான இரண்டு வார யாத்திரையை முடித்துவிட்டு கடந்த வாரம் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானத்தின் ஊடாக நாடு திரும்பினார்.

அப்போது அதே விமானத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்தன எம்பியும் வந்திருந்தார்.

அவர் சிகிச்சை ஒன்றுக்காக சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

அவர்கள் இருவரும் ஒன்றாகவே இலங்கை வந்தனர்.

அவர்கள் விமானத்தில் ஏறுவதற்கு முன்பும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கிய பின்பும் இருவரும் சீரியஸான டிஸ்கஷனில் இருந்தார்களாம்.






# அதிருப்தியை காட்டிய எம்பிக்கள்

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் அதிருப்தி அடைந்திருக்கும் மொட்டு எம்பிக்கள் பலர் கட்சி பணிகளில் இருந்து விலகி இருக்கின்றனர்.

கடந்த வாரம் பசில் ராஜபக்சவின் உத்தரவுக்கு அமைய மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் கண்டியில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

கண்டி மஹியாவையில் அமைந்துள்ள லொஹான் ரத்வத்தையின் வீட்டில்தான் அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பாட்டிருந்தது.

கொழும்பில் இருந்து சாகர,நாமல் மற்றும் ரோஹித அபயவர்தன உள்ளிட்டவர்கள் கூட்டத்துக்காக அங்கு சென்றனர்.

ஆனால்,கண்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டு கட்சி எம்பிக்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. இதனால் கூட்டம் கென்சல்.



# புது கட்சி

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் மொட்டு கட்சியின் எம்பிக்கள் சிலர் கட்சி பணிகளில் இருந்து விலகி இருக்கின்ற அதே நேரம்,சிலர் புது கட்சி ஒன்றை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிய முடிகிறது.

நிமால் லான்சா,விஜயதாசா ராஜபக்ச,அனுர பிரியதர்சன யாப்பா,சுசில் பிரேமஜயந்த, சுதர்சனி பெர்ணாண்டோபுள்ளே,டபிள்யு,டி.ஜே.செனவிரத்ன உள்ளிட்ட பலர் அந்தக் கட்சியில் இணையவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

மேலும் சிலர் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் மொட்டு கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



# ஏன் அழைக்கவில்லை?

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் மகளின் திருமணம் கடந்த வாரம் தலவதுகொடவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

மாப்பிள்ளை இந்திய பிரஜை.

இந்தத் திருமணத்துக்கு எல்லா அரசியல்வாதிகளும் அழைக்கப்படவில்லை.

ஜனாதிபதி,பிரதமர்,சபாநாயகர் ஆகிய ஒருசில அரசியல்வாதிகளே கலந்துகொண்டனர்.

ஏன் எங்களை அழைக்கவில்லை என்று கேட்டுத் துளைத்தெடுக்கிறார்களாம் சக அரசியல்வாதிகள்.



# ராஜபக்ஸக்களுக்கு வெட்டு



மாத்தறை மஹிந்த மஹிந்த ராஜபக்ஸ வித்தியாலயத்தில் கடந்த வாரம் பரிசளிப்பு விழா ஒன்று இடம்பெற்றது. ஆனால்,ராஜபக்ஸ சகோதரர்கள் யாரும் அழைக்கப்படவில்லை.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,டலஸ் அழகப்பெரும ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த பாடசாலையின் அதிபராக இருப்பவர் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பி ஒருவரின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாமலுக்கு ஜனாதிபதி கொடுத்த அடி

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானது முதல் மொட்டு கட்சி எம்பிக்கள் 10 பேர் அமைச்சுப் பதவிகள் கேட்டு போராடி வருவதை நாம் அறிவோம்.

இதனால் கடும் அதிருப்தியில் இருக்கும் அந்த 10 பேரும் ஒரு வருடத்தைக் கடந்த போதிலும்,அமைச்சுப் பதவிகளுக்கான போராட்டத்தை இன்னும் கைவிடவில்லையாம்.

கடந்த வாரம் அந்த 10 பேரில் ஒருவரான நாமல் ராஜபக்ச ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரை சந்தித்து அமைச்சுப் பதவிகளை பெறுவதற்கான போராட்டத்தைத் தாம் கைவிடவில்லை என்றும் எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காவிட்டால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் கூறினார்.

இந்தச் செய்தி ஜனாதிபதியிடம் எத்திவைக்கப்பட்டது.

அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்று கூறினாராம் ஜனாதிபதி.

தொடர் - 04



- சின்னத்தம்பி குருபரன் -



# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்

## - ஒரு வரலாற்றுப் பார்வை -







06-02-1946 இல் டீ.எஸ்.சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டு 20-09-1947 இல் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று டீ.எஸ். சேனநாயக்கா இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

04-02-1948 ஆம் ஆண்டு இந்தியா போல் அல்லாமல் பெருவாரியான போராட்டங்களோ ஆயுதப் புரட்சிகளொ இல்லாமல் இரத்தம் சிந்தாப் புரட்சியின் பயனாக இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது.

அதனால்தான் என்னவோ பெரும்பான்மையினரில் பலரும் அரசியல்வாதிகளும் பௌத்த கடும்போக்குவாதிகளும் சுதந்திரத்தின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் நாட்டைச் சிதைத்து வருகின்றனர்.

சுதந்திரம் என்பதற்கு இவ்வாறுதான் அர்த்தம் கொள்ளப்படுகின்றது.

Freedom என்பதற்கும் Independence> Liberty என்பதற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. குசநநனழஅ, ஐனெநிநனெநஉந, டுடிநசவல ஆகிய சொற்கள் ஒரே பொருளில் நோக்கப்பட்டாலும் அடிப்படையில் வேறுபாடு கொண்ட சொற்களாகவே கொள்ளப்படுகின்றன.

Independence என்பது “வேறொருவரின் ஆதிக்கத்திற்கு உட்படாத நிலை. பிறருடைய கட்டுப்பாடோ மேலாதிக்கமோ இல்லாத நிலை. அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நிலை. போராட்டத்தின் மூலம் விடுதலை பெற்றுக் கொண்ட நாடு“ எனப் பொருள் கொள்ளலாம்.

Freedom என்பது “ஒரு மனிதன் சுய கட்டுப்பாடுகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு ஏனையவர்களின் சுதந்திரத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் தான் விரும்பியதைச் செய்வதற்கான உரிமைகளைச் சுதந்திரம் என்பதாக அறிஞர்கள் வரைவிலக்கணப்படுத்தி உள்ளனர்.

முன்னையது நாட்டின் சுதந்திரத்தையும் பின்னையது தனிமனித சுதந்திரத்தையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றன.

“Preedom is in invisible word. If we want to enjoy it and fight for it. We must be prepared to extend it to everyone. Whether the rich or poor, whether the agree with us or not no matter what their race or colour of their skin”. W.L Willkie என்பவரின் வரைவிலக்கணமாகும்.

Liberty என்பதும் சுதந்திரம் என்பதன் கருத்தாகவே அமைகின்றன. “உள்ளக, வெளியார் தலையீடுகள் அற்ற வகையில் சுயாதீனமாகவும், தேசியம், தனித்துவம், நம்பிக்கையுடன் உரிமைகளோடு வாழ்வதைக் குறிக்கும்.“

இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது சிறுபான்மையினர் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை சுதந்திரக் காற்றை முழுமையாக அனுபவிக்கவில்லை என்பதே யதார்த்தமாகும்.

அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் சுதந்திரம், சுயாதீனம், தேசியம், தனித்துவம், உரிமை என்பதனை முழுமையாக அனுபவிக்காதவர்களாகவே வாழ்திருக்கின்றார்கள்.

வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். 2010 இன் பின்னர் இருந்து இன்றுவரை இலங்கை முஸ்லிம்களுக்கும் இதே நிலமைதான் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

காலத்திற்குக் காலம் பேரினவாதிகளும் பௌத்த அடிப்படைவாதிகளும் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையைப் பறித்தெடுப்பதிலேயே குறியாக இருந்திருக்கின்றனர்.

இதனால்தான் சிறுபான்மையினர் பெரும்பாலானோரிடத்தில் தேசிய உணர்வினைக் கட்டியெழுப்ப முடியாமல் இருக்கின்றன. அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை சிறுபான்மை மக்கள் தொடர்பாகப் பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்து பிரித்தாண்டு வந்திருக்கின்றனர்.


இந்தியாவில் சுதந்திர தினம் என்பதற்கும் இலங்கையில் சுதந்திர தினம் என்பதற்கும் இடையில் மலையளவு வேறுபாடு காணப்படுகினறது. இந்தியாவில் ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும் இரத்தத்துடன் கலந்த உணர்வாகக் காணப்படுகிறது. இலங்கையில் அவ்வாறில்லை.

சிறுபான்மையினரில் பெரும்பாலானோர் சுதந்திர தினத்தன்று கொடியேற்றுவதிலும் பங்குகொள்வதிலும் அக்கறை அற்றவர்களாகவும், அத்தினத்தைத் தமது சுதந்திர தினமாகக் கருதுவதுமில்லை.

ஒலிம்பிக், கிறிக்கற், தெற்காசிய விளையாட்டு, பொதுநலவாயப் போட்டிகளிலும் இலங்கையர் பங்கு பற்றி விளையாடினாலும் அதில் இலங்கை வெற்றி கொள்ள வேண்டும் என்ற விருப்பு அற்றவர்களாகவுமே பெருப்பாலான சிறுபான்மையினர் காணப்படுகின்றனர்.

இலங்கைக் கிறிக்கற் அணியில் எத்தனை தமிழ் வீரர்கள் விளையாடிய போதிலும் இன்றுவரை ஒரு தமிழர் தலைவராக நியமனம் செய்யப்படவில்லை.

இந்தியா, பிரித்தானியா, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளின் அணிகளில் சிறுபான்மையினர் தலைவர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் போது



முப்பது வீதத்திலும் அதிகமான சிறுபான்மையினரைக் கொண்ட இலங்கையில் ஒருவரைத் தலைவராக நியமிக்க முடியாதிருக்கும் போது சுதந்திரங்களும் ஏனைய விடயங்களும் எவ்வாறு சாத்தியமாகும்.

அதனால்தான் இளைஞர் போராட்டங்களும், ஆயுதப் போராட்டங்களும் தோன்றின.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வந்ததனை எதிர்த்தபோது தமிழ் தலைவர்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் (காலி முகத்திடல்) சிங்களக் குண்டர்களால் தாக்குதலுக்கு உள்ளானபோது சிங்களத் தலைவர்களில் பலர் பாராளுமன்றக் களரியிலும் மாடத்திலும் நின்று பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர் என்பதனை அப்போதைய தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகிய புகைப்படங்கள் செய்திகளில் இருந்து அறிய முடிந்தது.

இவ்வேளையில் தமிழ் மக்களுக்கெதிரான வன்முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் வகை தொகையின்றித் தாக்கப்பட்டனர். பல உயிர்கள் பறிக்கப்பட்டன.

தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. கதர்காம யாத்திரை சென்ற பலர் தாக்கப்பட்டார்கள். பல அரசியல் தலைவர்களும் இளைஞர்களும் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

இவ்வாறு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் இளைஞர் பேரவை ஒன்றுகூடிச் சில தீர்மானங்களை நிறைவேற்றி அத்தீர்மானங்களைப் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நீதி கோரும் முகமாக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் வடக்கையும் கிழக்கையும் இணைத்த கோமான் கோப்பாய் வன்னியசிங்கம் அவர்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இரயிலில் அனுப்பி வைத்தனர்.

இதனை அறிந்து கொண்ட தேசபிதா




டீ.எஸ்.சேனநாயக்காவும் சகாக்களும் கோமான் வன்னியசிங்கம் அவர்களை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வரவேற்று, அழைத்துச் சென்று சகல ஆடம்பர வசதிகளையும் செய்து கொடுத்து பிரித்தானியா செல்லும் பயணத்தைத் தடுத்துக் கொண்டனர்.

டீ.எஸ்.சேனநாயக்கா, எவ்.ஆர். சேனநாயக்கா ஆகியோர் புத்தி சாதுரியமாகக் பேசித் தம்வயப்படுத்தக்கூடியவர்கள் என்பதனை வன்னியசிங்கம் அவர்கள் தெரிந்திருந்தும் தடுமாறிவிட்டார்.

இவ்வாறுதான் பேரினவாதிகள் தமிழரின் சுயநிர்ணய உரிமைகளைப் பறிப்பதில் திட்டமிட்டுச் செற்பட்டனர்.

இச்செயற்பாடு தமிழ் இளைஞர் மகாசபைக்குப் பாரிய ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் கொடுத்தது. இச்செயற்பாடு வன்னியசிங்கம் அவர்களின் தூரநோக்கற்ற சிந்தனையையே எடுத்துக்காட்டியது.

ஆனால் சிங்களத் தலைவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை சிறுபான்மையினருக்கு எதிரான தீர்மானங்களை எடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் கட்சி வேறுபாடுகள் இன்றியே செயற்பட்டு வந்திருக்கினறனர்.

இதனைப் புரிந்தும் புரியாதவர்கள் போல் செயற்பட்டவர்கள்தான் தமிழ் தலைவர்கள் என்பது அப்பட்டமான உண்மையாகும். காணி அபகரிழப்பு, தமிழர் தாயகப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைத்தல், காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள் பிரச்சிகைள் தொர்பாக சஜித் பிறேமதாச, அளுரகுமார திசாநாயக்க போன்ற பல தலைவர்கள் இது தொட்ர்பான கருத்துக் கூறுவதைத் தவிர்த்தே வருகின்றனர்.

தொடரும்...

# மக்கள் வங்கியின் 'Biz Fair2023'




மக்கள் வங்கி, 'Biz Fair2023' என்ற தலைப்பில் வர்த்தக கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்து, உலக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தினத்தைக் கொண்டாடியுள்ளது. கொழும்பு 02 இல் அமைந்துள்ள, வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் மூன்றாவது மாடியில் இது நடைபெற்றது.

கைத்தொழில் துறை வங்கிச்சேவைப் பிரிவானது இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைக்கு சேவையாற்ற உறுதிபூண்டுள்ளது, வர்த்தக கடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன், நுண் கடன், அபிவிருத்தி வங்கிச்சேவை, வர்த்தக மறுமலர்ச்சி மற்றும் செயற்திட்ட கடன் வசதி உட்பட அபிவிருத்தியின் ஆறு துறைகளில் இது கவனம் செலுத்துகிறது.

மேலும், மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பு நாடளாவிய ரீதியில் 22 தொடர் வர்த்தக கண்காட்சிகளை நடத்தியுள்ளது. வங்கியின் 62 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுவதற்காக மாத்தறை பிராந்திய தலைமை அலுவலகம் தனது வளாகத்தில் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்து வர்த்தக கண்காட்சிகளை ஆரம்பித்திருந்ததுடன், 62 பேருக்கு கடன்களும் வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் கைத்தொழில் துறை வங்கிச்சேவைப் பிரிவு பொருளாதார வீழ்ச்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளது. மேலும், அதனது "People's Spark" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், இது சமீபத்திய பட்டதாரிகளுக்கு தொழில் முயற்சிகளைத் தொடரத் தேவையான திறன்கள் மற்றும் வளங்களைச் ஊட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# Family Pairing அம்சத்தை மேம்படுத்தும் TikTok




TikTok, அதன் இளைஞர் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரண்டு முக்கிய முயற்சிகள் குறித்து அறிவித்துள்ளது.

பெற்றோர்கள் மற்றும் வயது வந்தவர்களின் மதிப்புமிக்க கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக, TikTok அதன் உள்ளடக்க Filter செய்யும் திறன்களை Family Pairiபெக்குள் விரிவுபடுத்தியுள்ளது. இந்தப் புதிய அம்சம் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் Appஐ பயன்படுத்தும் போது தங்கள் குழந்தைகள் உலாவும் உள்ளடக்கத்தை மேலும் தனிப்பயனாக்க உதவுகிறது.

உள்ளடக்க குடைவநச கருவியைப் பயன்படுத்தி, வயது வந்தவர்கள் இப்போது அவர்கள் பொருத்தமற்றதாகக் கருதும் குறிப்பிட்ட சொற்கள், ஹேஷ்டேக்குகள் மற்றும் தீம்களை Filter செய்வதன் மூலம் தங்கள் குழந்தைகளுக்குப் பார்க்கும் அனுபவத்தை உருவாக்க முடியும்.

TikTok அனைத்து இளைஞர்களின் தேவைகளை ஒப்புக்கொள்கிறது மற்றும் Appற்குள் அவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சூழலை உருவாக்க வயது வந்தவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதை உறுதி செய்வதற்காக, TikTok Family Online Safety Institute உட்பட புகழ்பெற்ற நிபுணர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

அவர்களின் நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவு வயது வந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உலகத்துடன் கையாள்வதற்கும் இளைஞர்களின் உரிமைகளை மதிப்பதற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்த TikTok சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

# கடற்கரையை சுத்தப்படுத்திய DFCC வங்கி




அந்தவகையில், உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக சமுத்திர தினம் 2023 ஆகியவற்றைக் கொண்டாடும் வகையில், இலங்கை கடற்படை மற்றும் Eco Spindles Private Limited ஆகியவற்றுடன் இணைந்து, உஸ்வெட்டகியாவ, பிரீத்திபுர கடற்கரையில் விரிவான கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வை DFCC வங்கி ஏற்பாடு செய்தது.

கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தும் வங்கியின் முதன்மையான சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் முயற்சிகளில் ஒன்றான "சமுத்திரத்திற்கு வாழ்வளிப்போம்" முயற்சியின் மேம்பாட்டுடன், உலக சுற்றுச்சூழல் தினத்தை DFCC வங்கி கொண்டாடியுள்ளது.

அதன் நிலைபேற்றியல் மூலோபாயத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி முதியோர், கல்வி, உடற்பயிற்சி, அவசரகால நிவாரணம் மற்றும் தொழில் முயற்சியாண்மை ஆகியவற்றுடன், வங்கி கவனம் செலுத்தும் 6 தூண்களில் (6Es) ஒன்றாக இருக்கும் சுற்றுச்சூழல் தூணுடன் இந்த முயற்சி இணைந்துள்ளது.

இது ஐக்கிய நாடுகளின் நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்குகளுடன், குறிப்பாக நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்கு 13 (காலநிலை நடவடிக்கை), நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்கு 14 (நீரடி வாழ்வு) மற்றும் நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்கு 15 (நிலத்தில் வாழ்வு) ஆகியவற்றுடன் ஒத்திசைகின்றது.

உலக சுற்றுச்சூழல் தினம் 2023 ஆனது, #BeatPlasticPollution என்ற கருப்பொருளுடன் ஒன்றியதாக, கடலில் பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை குறைப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வெற்றிகரமாக மேம்படுத்துவதற்கு வழிகோலும் வகையில் ஊழியர்கள், குடும்பத்தினர், வாடிக்கையாளர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூர்வாசிகள் கலந்துகொண்டனர்.

# Home Lands Holding உடன் இணையும் HNB




ரியல் எஸ்டேட் துறையை புத்துயிர் பெறச் செய்யும் முயற்சியில், இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, எதிர்கால வீட்டு உரிமையாளர்களுக்கு தங்களுடைய சொந்த காணி கட்டடங்களுக்காக முதலீடு செய்வதற்கு சிறந்த நிதித் தீர்வுகளை வழங்குவதற்காக ரியல் எஸ்டேட் நிறுவனமான Home Land Holdings இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளியாக கையொப்பமிட்டுள்ளது.


Home Landsஇன் விரிவான கோப்புறை முழுவதிலுமுள்ள காணி நிலங்களுக்கும் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை பொருந்தும். பத்தரமுல்லையில் உள்ள Home Lands தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

HNBஇன் பிரதிப் பொது முகாமையாளர் – வாடிக்கையாளர் வங்கிக் குழுமம், சஞ்ஜேய் விஜேமான்ன, HNB AGM – தனிப்பட்ட நிதிச் சேவைகள் (PFS), காஞ்சனா கருணாகம மற்றும் Home Lands குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நளின் ஹேரத் மற்றும் HNB மற்றும் Home Lands குழுமத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

"உலகளாவிய தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ரியல் எஸ்டேட் துறைக்கான கண்ணோட்டம் நேர்மறையானது மற்றும் மீள்தன்மை கொண்டது. ரியல் எஸ்டேட் ஆர்வலர்கள் மற்றும் வருங்கால வீட்டு உரிமையாளர்கள் தங்கள் கனவு வீட்டுக்காக முதலீடு செய்ய விரும்பும் பல முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.

எனவே, எங்களின் நம்பிக் கைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு சந்தையில் சிறந்த தேர்வுகளை வழங்குவதற்காக Home Landsஇன் உத்தியோகபூர்வ வங்கி பங்குதாரராக கையொப்பமிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என HNB AGM – தனிப்பட்ட நிதிச் சேவைகள், காஞ்சனா கருணாகம தெரிவித்தார்.

# விவசாய இயந்திர சாதனங்களுக்கு நிதி வழங்குவதற்காக அமானா வங்கி மற்றும் ஹேலீஸ் இணைவு




அமானா வங்கி, முன்னணி விவசாய புத்தாக்க மற்றும் நிலைபேறாண்மைச் செயற்பாட்டு நிறுவனமான ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் லிமிடெட் உடன் இணைந்து, இலங்கையின் விவசாயிகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களின் பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அவசியமான பிரத்தியேக விவசாய–இயந்திர சாதன நிதி வசதிகளை அறிமுகம் செய்துள்ளது.

சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் வங்கியின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இந்த கைகோர்ப்பு அமைந்துள்ளதுடன், நாட்டின் விவசாய பொருளாதாரத்துக்கு அவசியமான சாதனங்களை விவசாயத்துறையில் பெற்றுக் கொள்ள உதவிகளை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

நாட்டின் விவசாயத் துறையின் பிரத்தியேகமான தேவைகள் தொடர்பில் ஆழமான புரிந்துணர்வுடன், அமானா வங்கியானது பிரத்தியேகமான நிதி வசதிகளை வழங்குவதற்கு தனது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

விவசாய சாதனங்களை கொள்வனவு செய்வதில், விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள நிதிச் சவால்களை கவனத்தில் கொண்டு, இலகு தவணை முறை மீளச் செலுத்தும் திட்டங்களினூடாக அவர்களின் செயற்பாடுகளை சீராக முன்னெடுத்துச் செல்வதற்கும், மேம்படுத்திக் கொள்வதற்கும் அமானா வங்கி ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக வாடிக்கையாளர்களுக்கு ஹேலீஸ் விவசாய இயந்திர சாதனங்களான நெல் இணைப்பு அறுவடை இயந்திரங்கள், ட்ராக்டர்கள், உலர்த்திகள், அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் வர்ண வகைப்படுத்தும் இயந்திரங்கள் போன்றன அடங்கலாக பல்வேறு சாதனங்களை கொள்வனவு செய்யவும், புகழ்பெற்ற வர்த்தக நாமங்களான Kubota, Agrotech, Shizuoka மற்றும் Kawashima ஆகியவற்றை இலகுவான கொடுப்பனவு வசதியில் நம்பிக்கையுடனான ஹேலீஸ் அக்ரிகல்ச்சரின் விற்பனைக்கு பிந்திய சேவையுடன் கொள்வனவு செய்து கொள்ளவும் முடியும்.



# ICBT உடன் கைகோர்க்கும் நவலோக

இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குநரான நவலோக மருத்துவமனை குழுமம், மேம்பட்ட கல்வி வாய்ப்புகளுடன் தாதியர் நிபுணர்களை மேம்படுத்துவதற்காக ஐஊடீவுயுடன் கைகோர்த்துள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், நவலோக்க மருத்துவமனை செவிலியர்கள் ஐக்கிய இராச்சியத்தின் புகழ்பெற்ற சந்தர்லேண்ட் பல்கலைக்கழகம் வழங்கும் B'Sc (Hon.) பட்டப்படிப்பை ஆரம்பிக்க வாய்ப்பளிக்கப்படுவார்கள்.

நவலோக்க ஹொஸ்பிடல் ஸ்கூல் ஆஃப் நர்சிங்கில் மூன்றாண்டு ஜெனரல் நர்சிங் டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்த தாதியர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும், மேலும் பாடக் கட்டணத்தில் சிறப்பு தள்ளுபடியும் அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், நவலோக்க மருத்துவமனை மற்றும் ஐஊடீவு மேற்படிப்பு கல்வியகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பில் உயிரியல் மருத்துவப் பொறியியலில் மேம்பட்ட டிப்ளோமா திட்டமும் அடங்கும்.

ICBT மேற்படிப்பு கல்வியகத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்தவுடன், கொழும்பு நவலோக்க மருத்துவமனையில் மூன்று மாத உயிரியல் மருத்துவ தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சி பெற மாணவர்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு கிடைக்கும்.

இந்த பயிற்சியானது, உயிரியல் மருத்துவ உபகரணங்களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் அளவீடு செய்தல் ஆகியவற்றில் மாணவர்களுக்கு அனுபவத்தை வழங்கும். மேலும் அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தி, உயிரியல் மருத்துவ பொறியியல் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற அவர்களை வழிநடத்தும்.

# DIGIECON 2030 உடன் SLT-MOBITEL கைகோர்ப்பு





'DIGIECON 2030' – இலங்கையின் டிஜிட்டல் கட்டமைப்பு 2030 சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.

SLT-MOBITEL இதர பங்காளர்கள் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்து 2023 ஒக்டோபர் மாத நடுப்பகுதி முதல் 2023 நவம்பர் மாத நடுப்பகுதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ள DIGIECON 2030 நிகழ்வுக்கு அனுசரணை வழங்கும்.

DIGIECON 2030 இன் பிரதான இலக்கு, இலங்கை டிஜிட்டல் கட்டமைப்பை தயார்ப்படுத்தி, அதனை வெளியிடுவது மற்றும், இலங்கையின் உற்பத்தியாளர்களுக்கு சர்வதேச சந்தைகளை அணுகி விஸ்தரிப்புகளை மேற்கொள்வதற்கு அவசியமான சர்வதேச உயர் தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பது, இலங்கையில் உயர் தொழில்நுட்பத் திறன் வாய்ந்த தொழிற்துறைகளை நிறுவுவது, வெளிநாட்டு நேரடி முதலீட்டு வாய்ப்புகளை கவர்வது, இலங்கையை தயாரிப்பு ஏற்றுமதி மையமாக மற்றும் சேவை நிலையமாக திகழச் செய்வது, உள்நாட்டு தொழிற்துறைகளுக்கு பிந்திய சர்வதேச செயன்முறைகளை அறிமுகம் செய்வது, சர்வதேச தொழிற்துறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், தொழில்நுட்ப அறிவை பரிமாற்றிக் கொள்ள உதவிகளை வழங்குவது மற்றும் உள்ளடக்கமான டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக, தொழிற்துறை 4.0 க்கும் அதற்கு அப்பாலும் நகர்வது போன்றன அடங்கியுள்ளன.

வர்த்தக சுடர்




# 'DIMO Energy' மின்சக்தி தீர்வுகள்

DIMO நிறுவனம் DIMO Energy எனும் புதிய வர்த்தகநாம அடையாளத்தின் கீழ் தனது மின்சக்தி மற்றும் வலுசக்தி செயற்பாடுகளை மறுசீரமைப்பதாக அறிவித்துள்ளது.

DIMO Energy ஆனது, உயர் மின்னழுத்தம், நடுத்தர மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் ஆகிய மூன்று பிரிவுகளில் மின்சாரத் தீர்வு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தீர்வுகளை செயற்படுத்துகிறது.

DIMO Energy நிறுவனத்தின் தற்போதைய தயாரிப்பு வகைகளில் cogeneration தீர்வுகள் மற்றும் agrivoltaics ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

அனைத்தும் ஒரே கூரையின் கீழ் DIMO Energy ஆனது, அதிநவீன தீர்வுகளை வழங்குவதை உறுதி செய்கிறது. மின் உற்பத்திச் செயன்முறைகளில் நேரம், முயற்சி, பண விரயங்களை இது நீக்குகிறது. பல தசாப்தங்களாக இணையற்ற நிபுணத்துவம் மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றின் மூலம், தீர்வாக வழங்கப்படும் ஒவ்வொரு துணை நடவடிக்கையும், சர்வதேச மின்னுற்பத்தி தீர்வுகளுக்கு இணையான வெளிப்பாட்டை வழங்க உகந்ததாக உள்ளது.

இன்றைய உலகில், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் வணிக நிறுவனங்கள், அதிகரித்து வரும் வலுசக்தி செலவுகளின் சவாலை எதிர்கொள்கின்றன. இந்தச் சவாலுக்கு DIMO Energy விரைவாகப் பதிலளிப்பதோடு, வெப்ப வெளியேற்றத்தை பயன்படுத்தி, cogeneration தீர்வுகள் தொடர்பான வழிகளை ஆராய்கிறது.




# Unity System மின் அதிநவீன காட்சியறை

இலங்கையிலுள்ள முன்னணி அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் கணனி விற்பனை நிலையமான Unity Systems PVT Ltd தனது புத்தம் புதிய விற்பனை நிலையத்தை பிரமாண்டமாக பம்பலப்பிட்டியில் திறந்து வைத்துள்ளது.

இது அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிட முடியாத தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை காண்பிக்கிறது.

Unity Plaza வில் முன்பு காணப்பட்ட இந்த காட்சியறையானது, தற்போது இணையற்ற ஷொப்பிங் அனுபவத்தை உறுதி செய்வதோடு, மேலதிக வசதியாக விற்பனைக்குப் பின்னரான சேவை மையத்தையும் கொண்டுள்ளது.

அதிநவீன தொழில்நுட்பத் தயாரிப்புகளின் வரிசையை கொண்டுள்ள Unity Systems PVT Ltd, கணனி ஆர்வலர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அன்றாடப் பயனர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

புதிய பம்பலப்பிட்டி விற்பனை நிலையமானது, வாடிக்கையாளர்களின் கணனி அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் நோட்புக்குகள், உயர் ரக வர்த்தகநாம கணனிகள், கணனித் திரைகள், பிரின்டர்கள் மற்றும் தொழில்முறை ரீதியான கணனிப் பாகங்கள் ஆகியவற்றின் விரிவான தெரிவுகளை கொண்டுள்ளது.

2004 இல் நிறுவப்பட்ட Unity Systems PVT Ltd ஆனது, கணனி தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் செல்ல வேண்டிய ஒரு இடம் எனும் நற்பெயரைப் பெற்றுள்ளது. ASUS, DELL, HP, Acer, Lenovo, Microsoft போன்ற தொழில்துறையின் முன்னணி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட மறுவிற்பனை கூட்டாளர் எனும் வகையில் Unity Systems PVT Ltd வழங்கும் ஒவ்வொரு தயாரிப்பின் நம்பகத்தன்மையுடன் தரத்திற்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது.

# இளைஞர் தொழில் முனைவோர் போட்டி




Spark: இலங்கை இளைஞர்களின் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்தி தொழில்முனைவு உலகில் வெற்றி பெறும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக 2023 மே 31 ஆம் திகதி இளைஞர் தொழில்முனைவோர் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. 15-24 வயதுக்குட்பட்ட இளம் சிந்தனையாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்க அழைக்கப்பட்டனர்.

இது எமது இளைஞர்களுக்கு புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவோர் யோசனைகள் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

SPARK தனது போட்டியாளர்களுக்கு நிபுணத்துவ வழிகாட்டுதல், முதலீடுகள், முக்கிய நெட்வொர்க்கிங் வாய்ப்புகள் மற்றும் ஒரு தொழிலதிபராக ஒருவரின் வளர்ச்சிக்குக் கருவியாக இருக்கும் பிற பகுதிகளில் ஆதரவை வழங்க திட்டமிட்டுள்ளது.

SPARK ஆனது இலங்கை முழுவதிலுமிருந்து 400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. மேலும் போட்டி ஏற்கனவே அதன் இரண்டாம் கட்டத்திற்கு முன்னேறியுள்ளது, இதில் தெரிவுசெய்யப்பட்ட முதல் 100 போட்டியாளர்கள் மட்டுமே சிறந்த பரிசுக்கான போட்டியில் இருப்பார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்களுக்கு தொழில்முனைவோர் நிபுணர்களால் நடத்தப்படும் பூட்கேம்ப்கள், பட்டறைகள் மற்றும் ஒருவருக்கு ஒருவர் ஆலோசனை அமர்வுகளுக்கான அணுகல் உட்பட பல வெகுமதிகள் வழங்கப்படுகின்றன.




# க்ராம்ப்கார்ட் பிளஸ் மூலிகை கிறீம் அறிமுகம்

லிங்க் நெச்சுரல் நிறுவனம் தசைப்பிடிப்பைத் தடுப்பதற்கு தனித்துவம் மிக்க மூலிகை கிறீமை தயாரித்துள்ளது. 04 வருடங்கள் விரிவான ஆராய்ச்சி மூலம் இது சாத்தியப்பட்டுள்ளது.

இது லிங்க் நெச்சுரல் இன் நிபுணத்துவத்தின் விளைவாக ஆயுர்வேத அறிவை நவீன விஞ்ஞானத்துடன் இணைத்து அதிநவீன புதுமையான தயாரிப்பாக இது வெளிவந்துள்ளது.இந்தப் புதிய தயாரிப்பானது லிங்க் நெச்சுரல் இன் தற்போதைய மூலிகை வலி நிவாரண வகையை மேலும் பலப்படுத்துகிறது.

இது மசில்காட் – தசைநார், தசை பலவீனம், தசைச் சிதைவு மற்றும் தசை வலிகளுக்கு நிவாரணியாக அமைந்துள்ளது.மாதவிடாய் வலியைப் போக்கவும் பயனுள்ளதாக இருக்கும்.

தசைப்பிடிப்பு என்பது இன்று பலர் எதிர்கொள்ளும் ஒரு பொதுவான பிரச்சினையாகும். இதிலிருந்து விடுதலை பெறுவதற்கு அல்லது நிவாரணம் பெறுவதற்கு, கவுண்டர்களில் கிடைக்கும் தைலம், பாம் அல்லது வலி நிவாரணிகளைத் தேய்த்தாலும் வலியினால் தொடர்ந்தும் அவதிப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையை அடையாளம் கண்டு, நீண்டகாலத் தேவைக்கான தீர்வை வழங்கும் நோக்கில் தசைப்பிடிப்புக்களிலிருந்து பாதுகாப்பான நிவாரணங்களை வழங்குவதுடன், இவ்வாறான அனுபவங்கள் தொடர்ந்தும் இடம் பெறாமல் தடுப்பதற்காகவும் லிங்க் நெச்சுரல் "க்ராம்ப்கார்ட் பிளஸ்" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.